# சமயக்குரவர் நால்வர் காட்டும் கிரியை நெறி

**ம.தனலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## அறிமுகவுரை

'சமயக்குரவர் நால்வர்' என்னும் சொல் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரைக் குறிக்கும். 'குரவர்' என்னும் சொல்லிற்கு நன்னெறியுள்ளவர், அறிவுறுத்துவோர்[1] என்று அகராதி பொருள் கூறுகிறது. சரியை, கிரியை, யோகம். ஞானம் என்னும் நான்கு நெறிகளும் பயின்ற ஒருவரே குரவர் என்றழைக்கப்படுகிறார்[2] என்று கு.வைத்தியநாதன் பொருள் கூறுகின்றார். களப்பிரர் ஆட்சிக்காலத்தில் சைவம் தளர்வுற்றபோது சைவ சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டியதாலும், சைவ சமயம் தொடர்பான கருத்துக்களை மக்களுக்கு அறிவுறுத்தியதாலும் இவர்கள் 'சமயக்குரவர்' என்றழைக்கப்பட்டனர்.

## சமயக்குரவர் நால்வர் காட்டும் சைவ நெறிகள்

மனிதப்பிறவியின் நோக்கமே இறைவனுடன் இரண்டறக்கலந்து மீண்டும் பிறவா நிலையை அடைவது என்று அனைத்துச் சமயத்தினரும் கருதுகின்றனர். இந்த நிலையை அடைவதற்குச் சமயக்குரவர்கள் தங்கள் பாடல்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளைச் சுட்டுகின்றனர்.

1. **சரியை** என்பது இறைவனுக்கும், இறையடியார்களுக்கும், சிவாலயத்திற்கும் உடலால் தொண்டு செய்தலாகும்.
2. **கிரியை** என்பது சிவனின் லிங்கத் திருமேனியை அகத்தும், புறத்தும் ஆகம விதிப்படி வழிபடுதலாகும்.
3. **யோகம்** என்பது மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியைப் பிராணாயாமத்தால் எழுப்பி ஆறாம் ஆதாரத்திற்குக் கொண்டு செல்லுதலாகும்.
4. **ஞானம்** என்பது இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும்.

முக்தி மார்க்கத்தின் இரண்டாம் படியான கிரியை நெறி குறித்து ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கிரியை நெறி : பொருள்

'கிரியை நெறி' என்றும் 'மகன்மை நெறி' என்றும் அழைக்கப்படும் 'சத்புத்திர மார்க்கம்' சைவ சமய நெறிகளில் இரண்டாம் படி நிலையாகக் கூறப்பட்டுள்ளது. முதல் படியான சரியை நெறியில் வழிபட்டு பக்குவமடைந்தவர்கள், கிரியை நெறியில் வழிபடத் தகுதி படைத்தோராவர். இந்நெறியில் வழிபடுவோர், இறைவன் கோயிலில் உள்ள உருவத்தில தான் உறைந்துள்ளான் என்று கருதும் சரியை நெறியில் வழிபடுபவர்களைவிட மேம்பட்டவர்கள். எளிதில் கிடைக்கும் மஞ்சள், வெல்லம் முதலியவற்றால் பிடிக்கப்படும் இறைவனின் அருவுருவத் திருமேனியான லிங்க வடிவத்திலும் இறைவன் உள்ளான் என்ற பக்குவமடைந்தவராவர்.

சரியை நிலையில் புறத்தில செய்த வழிபாட்டை மனத்துள்ளேயே ஆகம விதிப்படி செய்வோர் கிரியை நெறி நிற்பவராவர்.

**கிரியை நெறி - அகராதி விளக்கம்**

‘கிரியை’ என்னும் சொல்லுக்குச் சிவனை ஆகமங்களில் விதித்தவாறு புறத்தொழிலானும், அகத்தொழிலானும் வழிபடுகை”[3] என்றும் “செய்கை, ஆகம முறைப்படி வழிபாடு”[4] என்றும் அகராதிகளில் பொருள் வழங்கப்பட்டுள்ளது

**கிரியை - திருமூலர் இலக்கணம்**

திருமந்திரத்தில் கிரியைக்கான இலக்கணங்களைப் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும் சில பாடல்களில் கிரியைசார்ந்த வழிபாட்டு நெறிகளையும் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள்,

**“பூசித்தல், வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட்டு அன்னமும் நீசுத்தி செய்தல்மற்று**
**ஆசற்ற சற்புத்திர மார்க்கம் ஆகும்” (திரும.பா.1496)**

என அமைந்த பாடலில் இறைவனுக்குப் பூசை செய்தல் அவன் புகழைப் போற்றி வணங்குதல் அவன் திருப்பெயரைத் தியானம் செய்தல், குற்றமற்ற தவமாகிய வாய்மை, பொறாமைப்படாமை, உள்ளன்போடு இறைவனுக்கு நைவேத்தியம் செய்தல் முதலிய கிரியை வழிபாட்டு முறைகள் விளக்கம் பெற்றுள்ளன. சரியையில் அரும்பாக இருந்த வழிபாட்டாளா் நிலை கிரியையில் மலராக அடுத்த படிநிலையை அடைவதாகத் தாயுமானவர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**“விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே” (தாயு.பா.157)**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

**கிரியை வழிபாட்டு முறை**

கிரியை வழிபாடானது இலிங்கமூர்த்தியைக் கணிகமாகவும் (கணிகம் - குறிப்பிட்ட நேரத்துக்குத் தோற்றுவித்துக்கொள்வது. மஞ்சள் அல்லது வெல்லத்தால் திருவுருவம் செய்து வழிபடுதலைக் கணிகம் என்பது குறிக்கும். உடையவராய் எழுந்தருள்வித்துப் பூசாப்பொருள்களைத் திரட்டிக்கொண்டு ஓரிடத்தில் அமர்ந்து பூதசுத்தி முதலிய ஐந்து சுத்திகளைச் செய்தும் அகத்தும் புறத்தும் சிவனை வழிபடுதல் எனவே இஃது அகத்தொழில், புறத்தொழில் இரண்டாலும் சிவபெருமானது அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும்”[5] இதிலிருந்து,

1. சிவ உருவினை மஞ்சள் அல்லது வெல்லத்தால் லிங்க வடிவத்தில் உருவாக்க வேண்டும்.
2. பூத சுத்தி முதலான ஐந்து சுத்திகளைச் செய்ய வேண்டும்.
3. அந்த லிங்கத் திருமேனியை அபிடேகம், அர்ச்சனை, போன்றவை செய்து மனத்தால் வழிபாடு நிகழ்த்துதலாகும்.

இவ்வழிபாடு குறித்து சமயக்குரவர் நால்வரும் தத்தம் பாடல்களில் பதிவு செய்துள்ள விதம் அடுத்தபடியாக விளக்கப்பெறுகின்றது.

**அபிடேக வழிபாடு**

அபிடேக வழிபாடு என்பது பால், நெய் போன்ற பலவிதமானப் பொருட்களை இறைவன் திருமேனியில் சொரிந்து செய்யும் வழிபாடாகும். இதனைத் திருமந்திரம்,

**“ஆன்ஐந்தும் ஆட்டி அமரர் கணம்தொழத்” (திரும.பா.1832)**

என்றவாறு வெளிப்படுத்தியுள்ளது. இதில் பசு தரும் ஐந்து பயன்களைக்கொண்டு தேவர் கூட்டம் இறைவனைத் திருமுழுக்காட்டிய நிலை குறிப்பிடப்பெற்றுள்ளது. சமயக்குரவர்கள் அபிடேகம் செய்வதற்கு ஆவிலிருந்து பெறப்படும் பஞ்சகௌவியத்தைத தான் அதிகளவில் தங்கள் பாடல்களில் சுட்டுகின்றனர்.

**ஆனைந்து (பஞ்சகௌவியம்) அபிடேகம்:**

'ஆனைந்து' என்பது 'ஆவினில்' தோன்றும் ஐந்து பொருட்களான பால், தயிர், நெய், கோசனம் (சாணி), கோமயம் (சிறுநீர்) இவற்றைக் குறிக்கும். இவை ஐந்தினையும் ஆகம முறைப்படி சேர்த்தலே 'ஆனைந்து' எனப்படும் பஞ்சகௌவியம் ஆகும். இத்தகைய பஞ்சகௌவிய அபிடேகத்தைப் பற்றிச் சமயக்குரவர்கள் பல பாடல்களில் பாடியுள்ளனர். சான்றாக,

**"ஆவினில் ஐந்தும்கொண்டு ஆட்டுகந்தான்" (தி,ஞா.ச.தே.3:360:2)**
**ஆனிடை ஐந்தும் வைத்தார்**
**ஆட்டுவார்க்கு அருளும் வைத்தார் (தி.நா.தே.4:38:5)**

போன்ற பாடல்களின்வழி ஆவினில் பெறப்படும் பஞ்சகௌவியத்தால் திருமஞ்சனம் ஆட்ட இறைவன் அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார் என்பதையும் பூசைக்குப் பஞ்சகௌவியம் அளிப்போர்க்கு இறைவன் தன் அளப்பரிய அருளை வாரி வழங்குவார் என்பதையும் தெரிவித்துள்ளனர்.

**பால், தயிர், நெய் அபிடேகம்**

பஞ்சகௌவிய அபிடேகம் பற்றிக் கூறிய சமயக்குரவர்கள் பால், தயிர், நெய் குறித்தும் பாடியுள்ளதை,

**"பாலும் நெய்தயி ராடிய பான்மையும்" (தி.நா.தே.5:55:7)**

என்ற பாடலில் அறியலாம்.

**பால், நெய் அபிடேகம்**

பால் நெய் இரண்டை மட்டும் அபிடேகப் பொருட்களாக ஏற்றுக்கொள்ளும் இறைவன் திருப்பராய்த் துறையில் வீற்றிருப்பதாக திருஞானசம்பந்தர் கூறுவதை,

**"பாலும் நெய் பயின்று ஆடு பராய்த்துறை**
**ஆல நீழல் அடிகளே" (தி.ஞா.ச.தே.1:135:4)**

என்ற பாடலில் காணமுடிகிறது.

**பால் அபிடேகம்**

பாலால் மட்டும் செய்யப்படும் அபிடேகம் பற்றியும் சமயக்குரவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சான்றாக 'திருப்புகலி' தலத்தில் வீற்றிருக்கும் சிவன், பால் அபிடேகம் ஏற்கும்தன்மையினை விளங்குவதான செய்தி,

**"போலும் மேனியன் பூம்புகலியுள்**
**பாலதாடிய பண்பனல்லனே" (தி.ஞா.ச.தே. 2:161:9)**

என்ற பாடலில் இடம் பெற்றுள்ளது. பால் மட்டுமின்றி நீர், தேன், கனி, இளநீர் போன்ற அபிடேகங்கள் பற்றிய செய்திகளும் சமயக்குரவர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

**இளநீர், தேன் அபிடேகம்**

ஆவிலிருந்து பெறப்படும் பொருள்களோடு தேன் மற்றும் இளநீரை ஏற்றுக்கொள்பவனாக ஐயாற்றிறைவனைக் குறிப்பிட்டுள்ளதை,

**தேனெய் பால்தயிர் தெங்கிள**
**நீர்களும் பின்தெளி**
**ஆனஞ்சு ஆடுமுடி யானும்ஐ**
**யாறுடை ஐயனே (தி.ஞா.ச.தே. 2:142:5)**

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது.

இதுகாறும் கூறப்பட்டிருந்த அபிடேகப் பொருள்களில் இடம் பெற்றுள்ள அனைத்துப் பொருட்களும் அபிடேகத்திற்கு இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அபிடேகத்திற்குப் பிறகு அருச்சனை வழிபாடு பற்றி ஆராயப்படுகிறது.

**அருச்சனை வழிபாடு**

இறைவனின் திருப்பெயர்களை உச்சரித்தவாறு மலர்களிட்டு செய்யும் வழிபாடு அருச்சனை வழிபாடாகும்.

**அருச்சனை - ஆயிரம் திருப்பெயர்கள்**

அருச்சனை வழிபாடு செய்யும போது ஆயிரம் திருப்பெயர்களால் இறைவனை அர்ச்சிக்க வேண்டும் இசையாகவும், இசை வடிவமாகவும் ‘திருப்பழனம்’ தலத்தில் வீற்றிருக்கும் சிவனை திருநாவுக்கரசர், அர்ச்சனையின போது அவனுடைய ஆயிரம் திருப்பெயர்களைக் குறிப்பிட்டு வாழ்த்திட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதை,

**பண்ணு மாகவே பாடும் பழனத்தான்**
**எண்ணும் நீஅவன் ஆயிரம் நாமமே (தி.நா.தே.5:35:3)**

என்ற பாடலின வழி அறிய இயலுகின்றது.

மாணிக்கவாசகரும்

**ஒரு நாமம் ஓர்உருவம் ஒன்றும் இலாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாள் தெள்ளேணம் கொட்டாமோ (மா.வா.திருத்தெள்ளேணம் பா.4)**

என்ற பாடலில் ஒரு பெயர், ஓர் உருவம் இல்லாத பெருமானுக்கு ஆயிரம் திருப்பெயர்களைக் கூறி தெள்ளேணம் கொட்டுவோம் என்று குறிப்பிடுவதும் இவண் நோக்கத்தக்கது. கிரியை நெறியில் ஐந்தெழுத்து மந்திரத்தைச் சிவ உருவின் முன்னர் ஓதி வழிபடும் நிலை சமயக் குரவர்களிடம் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பான கருத்துகள் அடுத்ததாக அமைகின்றன. ஐந்தெழுத்து அருச்சனை என்பது ‘நமசிவாய’, சிவாயநம போன்ற மந்திரச் சொற்களால் சிவனை அருச்சனை செய்து வழிபடுவதைக் குறிக்கும். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓத வேண்டுமென்பதைத் திருஞானசம்பந்தர்,

**“நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத்தோதி” (தி.ஞா.ச.தே.3:378:8)**

என்ற பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். இதில் நாவினுக்கு இயல்பானதாக அஞ்செழுத்து ஓதுவது அமைவதாகக் குறிப்பிட்டுள்ளார். ‘அஞ்செழுத்து ஓதாத நாக்கு நாக்கே இல்லை’ என்ற கருத்துடையவராக திருஞானசம்பந்தர் விளங்குவதை,

**நம்பன் நாமம் நவி லாதன நாவென லாகுமே (தி.ஞா.ச.தே.2:141:3)**

என்ற பாடல் விளக்கியுள்ளது.

தேவார மூவர்களும் ஐந்தெழுத்தின் பெருமைகளைப் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று இதன் பெருமையை விளக்கும்வகையில் தனிப்பதிகங்களைப் பாடியுள்ளதையும் அறியஇயலுகின்றது. இத்தகைய பதிகம் முழுவதும் திருவைந்தெழுத்தின் பெருமையே பேசப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சிவவாக்கியரும் ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்புகளைப் பல இடங்களில் பாடியுள்ளார். சான்றாக,

**இச்சகம் சனித்ததும் ஈசன் ஐந்து எழுத்திலே**
**மெச்சவும் சராசரங்கள் மேவும் ஐந்து எழுத்திலே (சிவ வாக்கியர் பாடல்.523)**

என அமைந்த பாடலில் இவ்வுலகம் பிறந்ததற்கும் உலக உயிர்களும் அஃறிணைப் பொருட்களும் இவ்வுலகில் இடம் பெற்று நிற்பதற்கும் ஐந்து எழுத்து மந்திரமே காரணம் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. நாவுக்கரசரும் தான் ஐந்தெழுத்தை மறக்காத தன்மையை,

**உன்னாமம் என்நாவில் மறந்தறியேன் (தி.நா.தே. 4:1:6)**

என்ற பாடலில் பாடியுள்ளார்.மேலும் தேவார மூவரும் ஐந்தெழுத்தின் பெருமை குறித்து தனிப் பதிகமே பாடியுள்ளனர். அதிலும் திருஞானசம்பந்தர் இரு பதிகங்கள் பாடியுள்ளார். மாணிக்கவாசகரும் திருவாசகத்தின் முதல் பாடலை

**“நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க” (மா.வா.சிவபுராணம் பாடல் வரி1)**

என்று ஐந்தெழுத்து மந்திரத்திலிருந்துதான் தொடங்குகிறார்.

**நாதன் நாமம் நமச்சி வாயவே (தி.ஞா.ச.தே.3:307:1)**
**நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே (தி.நா.தே.4.11.2)**
**வல்ல வாஉனை நான் மறக்கினும்**
**சொல்லும்நா நமச்சி வாயவே (சு.தே.7:26:4)**

என்ற வாறெல்லாம் சமயக்குரவா்கள் ஐந்தெழுத்தின் பெருமையை தனிப்பதிகங்களாகவும் பதிவிட்டுள்ளனர். கிரியை வழிபாட்டாளா்கள் மனத்தால் வழிபடும் நிலையையும் சமயக்குரவா்கள் தங்கள் பாடல்களில் பதிந்துள்ளவை அடுத்ததாக ஆராயப்படுகின்றன.

**மனத்தால் வழிபடும் முறை**

திருஞான சம்பந்தா் இறைவனை மனத்தில் எண்ணி உருகி மலா்களை அா்ச்சனையாக இட்டு வழிபட வேண்டும் என்பதை,

**"உருகி மலா் கொடு வந்துஉமை**
**யேத்தது நாம டியோம்" (தி.ஞா.ச.தே.1:116:8)**

என்ற பாடலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளாா். திருநாவுக்கரசரும்,

**"நிறையும் பூம் பொழில் சூழ்திரு நின்றியூா்**
**உறையும் ஈசன் உள்கும் என் உள்ளமே" (தி.நா.தே.5:23:4)**

என்ற பாடலில் திருநின்றியூரில் வீற்றிருக்கும் ஈசனை தன் உள்ளத்தில் இடங்கொடுத்து வழிபடுவதாகக் குறிப்பிட்டுள்ளாா். மாணிக்கவாசகரும்,

**உத்தமன் அத்தன் உடையான்**
**அடியே நினைந்து உருகி (மா.வா.திருச்சதகம்.3)**

என்ற பாடலில் சிவனை மனத்துள்ளே உருகி நினைந்து வழிபட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளாா். இவ்வாறு கிரியை நெறியில் நிற்பவா்கள் இறைவனை அழைக்கும்விதம் குறித்தும், உறவு குறித்தும் ஆயப்படுகிறது.

**அழைக்கும் முறை**

மகன்மை நெறி என்றழைக்கப்படும் கிரியை நெறியில் இறைவனுக்கும் வழிபடுபவனுக்கும் இடையே உள்ள உறவுமுறை தந்தைக்கும், மகனுக்கும் உள்ள உறவு முறையாகும். எனவே, சமயக்குரவா் நால்வரும் சிவனை எந்தை, எந்தாய், தந்தை, தாய் என்றெல்லாம் அழைக்கும் போக்கைக் கொண்டிருப்பதை அவா்தம் பாடல்கள்வழி அறியமுடிகிறது. திருஞானசம்பந்தா் சிவனைத் தந்தையாக பாவித்துப் பாடியதை

**"பாடுவாருக்கு அருளும் எந்தை" (தி.ஞா.ச.தே.1:53:4)**
**"ஆழி யெந்தையென்று அமரா்கள் சரண்புக (தி.ஞா.ச.தே.2:238:6)**

என்ற பாடல்களைச் சான்றுகளாகக் காட்டலாம். திருநாவுக்கரசா் எல்லா உறவு நிலைகளில் சிவனே நிறைந்துள்ளாா் என்பதை,

**"அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ**
**அன்புடைய மாமனும் மாமி யும்நீ" (தி.நா.தே.6:95:1)**

என்ற பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளாா். சுந்தரரும் சிவனை தந்தை, அத்தா என்றவாறும் எந்தாய் என்றும் அழைக்கும் போக்கை

**அன்னேயென் அத்தா என்று அமரரால் (சு.தே.7:3:2)**
**வரிஅரவம் உடன்துயில வைத்தருளும் எந்தை (சு.தே. 7:3:3)**
**எந்தாய் நின்னையல்லால் இனி யாரை நினைப்பேன் (சு.தே. 7:22:7)**

என்ற பாடல்களின் வழி அறிய இயலுகின்றது. இதனைப்போன்ற நிலையை மாணிக்கவாசகரிடமும் காண முடிகின்றது. அவா் சிவனை நோக்கி

**"கண்நுதல் எந்தை கடைத்தலை முன்நின்ற தன்பின் (திருத்தோணோக்கம் பா.9)**

என்று குறிப்பிடும் பாடலின் வழி தந்தை என்று இறைவனை அழைக்கும் போக்கை அறிந்து கொள்ள முடிகிறது. கிரியை நெறியில் இறைவனை தந்தை, தாய் என்று அழைக்கும் சமயக்குரவா்கள் தங்களை மகன் என்றோ பிள்ளை என்றோ குறிப்பிட்டுப் பாடல்களை உருவாக்காதது ஆராயத்தக்கது. இதுவரை கிரியை என்னும் மகன்மை நெறி குறித்து ஆராய்ந்ததில் கிடைத்த சில முடிவுகள் தொகுப்புரையில் தரப்படுகின்றன.

**தொகுப்புரை**

1. சரியை நெறியை மேற்கொள்ளும் அடியவர்கள் அந்நெறிமுறைகளுடன் மன வழிபாட்டினாலும் இறைவனை வழிபடுவது கிரியையாகும்.
2. சிவனிற்கு மஞ்சள் அல்லது வெல்லத்தால் லிங்க வடிவத்தல் உருவம் செய்து பூத சுத்தி முதலான ஐந்து சுத்திகளை நிறைவேற்றி அர்ச்சனை, அபிடேகம் செய்து மனத்தால் வழிபடும் நிலையை கிரியை என்பதற்கான விளக்கமாகக் கூறலாம்.
3. கிரியை என்னும் இந்நெறி மகன்மை நெறி என்றும், சத்புத்திர மார்க்கம் என்றும் அகவழிபாடு என்றும் அழைக்கப்படுகிறது.
4. கிரியை வழிபாட்டு நெறியை மேற்கொள்வோர் சிவனுக்கு அபிடேகம் செய்ய பால், தயிர், நெய், பஞ்சகவ்யம், தேன், இளநீர், போன்றவற்றைப் பயன்படுத்திட வேண்டும் என்பது சமயக்குரவர்களின் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. கிரியை நெறியின் செயல்பாடுகள் அனைத்தும் மனத்துடன் ஒன்றி, உருகி நினைந்து வழிபட வேண்டும்.
6. மகன்மை நெறியில் ஈடுபட்டுச் சிவனை வழிபடுவோர் எந்தை, எந்தாய், அப்பன், அத்தா என்றவாறு குறிப்பிட்டு அழைத்து வழிபாடு நிகழ்த்துகிற நிலை குறிப்பிடப்பெற்றுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. சைவ சித்தாந்த அகராதி., கழக வெளியீடு ப.95
2. திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரங்கள்.,கு.வைத்தியநாதன்.,(ப.ஆ.)ப.83
3. சமயச் சொல்லகராதி., டாக்டர் சீ.சசிவல்லி ப.107
4. லிப்கோ தமிழ்-தமிழ் ஆங்கில அகராதி ப.209
5. சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளும்,வரலாறும்.,சைவ சித்தாந்த செம்மல் ச.கங்காதரன் ப.151

**பார்வை நூல்கள்**

1. கங்காதரன்.ச., சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள், மதுரை தமிழாலஜி பப்ளிஷ்ஸ் மதுரை.
2. தாயுமானவர்., தாயுமானவர் பாடல்கள் சகுந்தலை நிலையம் சென்னை.
3. நடராஜன்.பி.ரா., திருஞானசம்பந்தர் தேவாரம் (1,2,3 திருமுறைகள் - முதல், இரண்டாம், மூன்றாம் பகுதி) வரலாற்று முறையில் மூலமும், உரையும்., உமா பதிப்பகம், சென்னை - 2004.
4. நடராஜன்.பி.ரா., திருநாவுக்கரசர் தேவாரம் (4,5,6 திருமுறைகள் - முதல், இரண்டாம், மூன்றாம் பகுதி) வரலாற்று முறையில் மூலமும், உரையும்., புலவர்.பி.ரா.நடராஜன்., உமா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 2012.
5. நடராஜன்.பி.ரா., சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை) - வரலாற்று முறையில் மூலமும், உரையும்., புலவர்.பி.ரா.நடராஜன்., உமா பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு 2010.
6. நடராஜன்.பி.ரா., மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம்., உமா பதிப்பகம்,சென்னை மூன்றாம் பதிப்பு 2014.
7. மாணிக்க வாசகன்.ஞா., திருமூலர் திருமந்திரம் மூலமும் விளக்கவுரையும், உமா பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு 2011.
8. ராமநாதன்.அரு.,(ப.ஆ.)., சித்தர் பாடல்கள் முதற்பாகம்., பிரேமா பிரசுரம், சென்னை, ஆறாம் பதிப்பு நவம்பர் 1987.
9. வைத்தியநாதன்.கு., திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரங்கள்., திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம், திருவிடைமருதூர்.